செய்தி வெளியீடு எண்.510 நாள்.20.8.2009

**கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறையில் 2009–2010 ஆம் ஆண்டிற்கு பகுதி–2 திட்டத்திற்கு ரூ.3 கோடியே 66 இலட்சத்து 80 ஆயிரம் ஒதுக்கீடு செய்து 27 ஆணைகளை தமிழக அரசு பிறப்பித்துள்ளது.**

கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறையின் மானியம் கோரிக்கைகள் தமிழ்நாடு சட்டமன்றத்தில் 11.7.2009 அன்று நடைபெற்றது. மானியத்தில் மாண்புமிகு ஊரக தொழில்கள் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு.பொங்கலூர் நா.பழனிச்சாமி அவர்களும், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.உ.மதிவாணன் அவர்களும், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.பி.பி.சாமி அவர்களும், தங்கள் துறையின் 2009–2010 ஆம் ஆண்டிற்கான பகுதி–2 திட்டங்களை செயல்படுத்துவது குறித்து அறிவித்தார்கள்.

கால்நடை பராமரிப்புத் துறையில் பகுதி–2 திட்டத்தில் 2009–2010 ஆம் ஆண்டிற்கு ரூ.1 கோடியே 20 இலட்சத்து 3 ஆயிரமும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு ரூ.26 இலட்சத்து 80 ஆயிரமும், பால்வளத்துறைக்கு ரூ.1 கோடியே 15 இலட்சமும், மீன்வளர்ச்சித் துறைக்கு ரூ.1 கோடியே 4 இலட்சத்து 97 ஆயிரமும், ஆக மொத்தம் 3 கோடியே 66 இலட்சத்து 80 ஆயிரம், பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிடவும், துறையின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், இத்திட்டங்களை ஓராண்டுக்குள் செயல்படுத்துவதற்கு ஏதுவாக நிதித்துறையின் ஒப்புதல் பெற்று நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை செயலாளர் திரு.சி.முத்துகுமாரசாமி, இ.ஆ.ப. அவர்கள் ஆணைகளாக வெளியிட்டுள்ளார்கள். அதன் விவரங்கள் வருமாறு:-

**கால்நடை பராமரிப்புத் துறை**:

| வ. எண். | விவரம் | ஒதுக்கப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | 26 எண்ணிக்கையில் கணினிகள், அறைகலன் மற்றும் ஒரு ஸ்கேனர் (தலைமைச் செயலக பயன்பாட்டிற்கு) | 14.03 |
| 2. | கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகளுக்காக 5 எண்ணிக்கைகள் தானியங்கி பகுப்பான்கள் | 12.50 |
| 3. | கால்நடை நோய் புலனாய்வு பிரிவு மற்றும் மத்திய ஆய்வு கூடத்திற்கு 7 தானியங்கி இரத்த பகுத்தாய்வு உபகரணங்கள் | 35.00 |
| 4. | கால்நடை நோய் புலனாய்வு பிரிவு மற்றும் மத்திய ஆராய்ச்சி கூடத்தின் உபயோகத்திற்கு 7 தானியங்கி பகுத்தாய்வு உபகரணங்கள் | 3.50 |
| 5. | மத்திய ஆராய்ச்சிக் கூடத்தின் உபயோகத்திற்கு இரண்டு மின்னணு தராசு இயந்திரங்கள் | 3.00 |
| 6. | மத்திய ஆராய்ச்சிக் கூடத்திற்கு எலிக்காய்ச்சல் நோய் கண்டறிய 1 இருட்டடி நுண்ணோக்கி | 5.00 |

| | | |
|---|---|---|
| 7. | மத்திய ஆராய்ச்சி கூடத்தின் பயன்பாட்டிற்காக 2 ஆழ் உறை நிலையூட்டுகள் | 1.00 |
| 8. | கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகளுக்கு 20 நிகிரி இயந்திரங்கள் | 2.00 |
| 9. | கால்நடை பராமரிப்பு ஆணையரகத்திற்கு மின் ஆளுமை வசதிகள் ஏற்படுத்த | 44.00 |
| | **மொத்தம்** | **120.03** |

**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்:**

| வ. எண். | விவரம் | ஒதுக்கப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வீரியம் நீக்கப்பட்ட பன்றிக் காய்ச்சல் நோய் நச்சுயிரிகளை கொண்டு தடுப்பூசி தயாரித்தல் | 13.00 |
| 2. | திருப்பூரில் பல்கலைகழக கால்நடை மருத்துவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கு | 13.80 |
| | **மொத்தம்** | **26.80** |

**பால்வளத்துறை**

| வ. எண். | விவரம் | ஒதுக்கப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு 2000 எண்ணிக்கைகள் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் பால் கேன்கள் வாங்க | 27.00 |
| 2. | பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு 100 ஸ்டெயின்லஸ் ஸ்டீல் உபகரணங்கள் | 6.50 |
| 3. | 100 எண்ணிக்கைகள் மின்னணு எடை கருவிகள் | 18.00 |
| 4. | 5 எண்ணிக்கைகள் தண்ணீரை லேசாக்கும் யூனிட் கேன் ஸ்க்ரப்பர் – 5 எண்ணிக்கைகள் | 5.00 |
| 5. | 23 வட்டார அலுவலகங்களுக்கு நிகிரி மற்றும் மின் ஆளுமை வசதி | 13.80 |
| 6. | ஆணையரகத்தில் தனியாக பணிமனை அமைத்தல் | 17.00 |
| 7. | தரக்கட்டுப்பாட்டு ஆய்வகத்துடன் கூடிய நடமாடும் ஊர்தி | 15.00 |
| 8. | ஆணையரக அலுவலக சிறப்பு மராமத்துப் பணிகள் | 4.40 |
| 9. | ஆணையர் அலுவலக முன்பக்க சுவர் எழுப்ப | 3.50 |
| 10. | மாதவரம் பால்பண்ணைக்கு பம்ப் செட் வாங்க | 0.30 |
| 11. | கூட்டுறவு பால் தணிக்கைத் துறைக்கு 10 எண்ணிக்கைகள் கணினிகள் வாங்க | 5.00 |
| | **மொத்தம்** | **115.00** |

**<u>மீன்வளத்துறை</u>**

| வ. எண். | விவரம் | ஒதுக்கப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மீனவர்களுக்கு வினைத்திறன் மிக்க அடையாள அட்டைகள் வழங்க | 20.00 |
| 2. | கணினி மற்றும் துணைக் கருவிகள், நிகிரி மற்றும் பிரிண்டர், அகண்ட கற்றை இணைய தள வசதி ஏற்படுத்த | 21.00 |
| 3. | மீன்விதை பண்ணைகளிடையே தகவல் பரிமாற்றத்தை வலுப்படுத்த கணினி மற்றும் துணைப் பொருள்கள் வாங்க | 13.97 |
| 4. | உள்நாட்டு மீனவர்களுக்கு மீன்வலை வாங்க நிதியுதவி | 20.00 |
| 5. | 5 மீனவர் கிராமங்களுக்கு வழிகாட்டி விளக்குகள் வாங்க (Guide Lights) | 30.00 |
| | **மொத்தம்** | **104.97** |

ஆக மொத்தம் ரூபாய் மூன்று கோடியே அறுபத்து ஆறு இலட்சத்து எண்பதாயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாணைகள் 11.7.2009 அன்று நடைபெற்ற மானியத்திற்கு பிறகு 30 நாட்களுக்குள் (12.8.2009) வெளியிடப்பட்டுள்ளது. ஆணையில் குறிப்பிட்டுள்ள கருவிகள் அரசு ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளுக்குட்பட்டு கொள்முதல் செய்யப்படும். பணிகளும் அவ்வாறே நிறைவேற்றப்படும்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.